**செப்டம்பர் – 14**

# TNPSC துளிகள்

- அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவிருக்கும் 'உலக முதலீட்டாளர்கள் சந்திப்பு – 2019 க்கான முதலீட்டு ஊக்குவிப்பு பிரச்சாரத்தை தமிழ்நாடு அரசாங்கம் தொடங்கியது.
  - இதற்குமுன் தமிழ்நாடு அரசு 2015ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் உலக முதலீட்டாளர்கள் சந்திப்பின் முதலாவது பதிப்பை நடத்தியது.
- ஜார்க்கண்ட் மாநில அரசானது அலுவலகப் பயன்பாட்டிற்காக மின் வாகனங்களை அறிமுகப்படுத்தியது. அரசாங்கப் பயன்பாட்டிற்காக சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனங்களை கொள்முதல் செய்யும் இந்தியாவின் ஐந்தாவது மாநிலமாகவும், கிழக்கிந்தியாவின் முதலாவது மாநிலமாகவும் ஜார்க்கண்ட் உருவெடுத்துள்ளது.
  - ஜார்க்கண்ட் மாநிலம் அறிமுகப்படுத்துவதற்கு முன், அலுவலகப் பயன்பாட்டிற்காக மின் ஊர்திகளை தில்லி, மஹாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா ஆகிய மாநிலங்கள் கொள்முதல் செய்துள்ளன.
- பஞ்சாப் மாநில சட்டசபையானது பஞ்சாப் நில மேம்பாட்டு திட்டங்கள் (ஹரியானா திருத்தம்) மசோதா, 2018-ஐ நிறைவேற்றியது. இதன் நோக்கமானது விவசாயிகளின் நீர்ப்பாசன பயன்பாட்டிற்காக மற்ற விவசாயிகளின் நிலங்களுக்கு அடியில் குழாய் பதிப்பை ஏற்படுத்துவதாகும்.
- குன்மிங் மற்றும் கொல்கத்தா ஆகிய நகரங்களுக்கிடையே புல்லட் இரயில் சேவையை தொடங்க சீனா முடிவு செய்துள்ளது. இந்த புல்லட் இரயிலானது அண்டை நாடுகளான மியான்மர் மற்றும் வங்க தேசம் ஆகிய நாடுகள் வழியே செல்லும்.
- ஆசியான் உலக பொருளாதார மன்றமானது "ஆசியான் 4.0: தொழில்முனைவு மற்றும் நான்காவது தொழில் புரட்சி" என்ற கருத்துருவுடன் வியட்நாமின் ஹனோயில் தொடங்கியது.
- சுற்றுலா ஒருங்கிணைப்பாளர்களுக்கான இந்திய சங்கமானது (IATO - Indian Association of Tour Operators) ஆந்திரப் பிரதேச சுற்றுலாத் துறையுடன் இணைந்து விசாகப்பட்டினத்தில் 34வது ஆண்டு மாநாட்டை நடத்தியது.
  - இம்மாநாட்டின் கருத்துருவானது, "குறிக்கோள்: 2022ல் 20 மில்லியன் சுற்றுலாப் பயணிகள், சவால்கள் மற்றும் வாய்ப்புகள்" ஆகும்
- நீடித்த வளர்ச்சி இலக்குகள் மற்றும் தொற்றா நோய்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தலில் சிறப்பான பங்காற்றியதற்காக புகழ்பெற்ற ஐ.நா. நிறுவனங்களுக்கிடையேயான பணிக் குழு விருது (UNIATF - UN Interagency Task force) மனோஜ் ஜலானிக்கு வழங்கப்பட்டுள்ளது.
- இந்திய ஹாக்கி அணியின் முன்னாள் தலைவர் சர்தார் சிங் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.
- லக்னோ நகராட்சியானது "குலே மீ சச் கீ காந்தி பஜாவோ - சீதி பஜாவோ" (திறந்தவெளியில் மலம் கழிப்பதற்கு எதிராக தகவல் அளித்தல்) என்ற திறந்த வெளியில் மலம் கழிப்பதற்கு எதிரான பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.
- இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT) - கரக்பூர் ஆனது ஆராய்ச்சியில் கூட்டுமுயற்சி, திறன் கட்டமைப்பு மற்றும் இதர கல்விப் பங்களிப்புகளுக்கு உதவுவதற்காக கனடா

கார்லீடோன் பல்கலைக் கழகத்துடன் ஒப்பந்தம் ஒன்றில் கையெழுத்திட்டுள்ளது.

- மாற்றுத் திறனாளிகளின் மேம்பாட்டிற்கான துறையானது மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையங்கள் மீதான தேசியக் கருத்தரங்கை புது தில்லியில் நடத்தியது.
- மத்திய விவசாய மற்றும் விவசாயி நலன் அமைச்சர் பால் பதனிடுதல் மற்றும் கட்டமைப்பு மேம்பாட்டு நிதியைத் (DIDF - Dairy Processing and Infrastructure Development fund) தொடக்கி வைத்தார்.
- நேபாள இராணுவம் சீனாவுடன் இரண்டாவது கூட்டுப் படைப் பயிற்சியான சாகர்மாதா தோழமை - 2 (Sagarmatha Friendship - 2) என்ற பயிற்சியில் கலந்து கொள்ளவிருக்கிறது.
    - சமீபத்தில் நேபாளம் பீம்ஸ்டெக் நாடுகளின் முதலாவது கூட்டு இராணுவப் பயிற்சியில் கலந்துகொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

# தேசியச் செய்திகள்

## என்எஸ்பி (NSP) கைபேசி செயலி

- நாட்டின் முதலாவது தேசிய கல்வி உதவித் தொகை வாயில் (National Scholarship Portal) கைபேசி செயலியை மத்திய சிறுபான்மை நல அமைச்சர் வெளியிட்டார்.
- இது ஏழ்மை மற்றும் பின்தங்கிய பிரிவைச் சார்ந்த மாணவர்களுக்காக சீரான, அணுகக்கூடிய மற்றும் தடையற்ற உதவித் தொகை அமைப்பை உறுதி செய்யும்.




- இச்செயலியின் மூலம் மாணவர்கள் பல்வேறு உதவித் தொகைகள் குறித்த தகவல்களைப் பெற முடியும். மேலும் இச்செயலியின் மூலம் உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கவும் கோப்புகளை பதிவேற்றம் செய்யவும் விண்ணப்பத்தின் நிலையை அறியவும் உதவித் தொகை வழங்கியதன் நிலையையும் மாணவர்கள் அறிய முடியும்.

## தேசிய நீர் விருதுகள் 2018

- மத்திய நீர் வளங்கள், நதி மேம்பாட்டு மற்றும் கங்கை புனரமைப்பு அமைச்சகமானது 13 பிரிவுகளுக்கு தேசிய நீர் விருதுகளை உருவாக்கியுள்ளது.
- இது நாட்டில் உள்ள அனைவரும் நீர் வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்தவும் நீர் பற்றிய உணர்வுநிலையை உருவாக்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

## விஷ்வகர்மா ராஷ்திரிய புரஷ்கார் மற்றும் தேசிய பாதுகாப்பு விருதுகள்

- 2013 ஆம் ஆண்டிற்கான விஸ்வகர்மா ராஷ்திரிய புரஷ்கார் மற்றும் தேசிய பாதுகாப்பு விருதுகளை மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை இணை அமைச்சர் (தனிப்பொறுப்பு) அவர்கள் வழங்கினார்.
- VRP (Vishwakarma Rashtriya Puraskar) ஆனது, ஒரு தொழிலாளி அல்லது தொழிலாளர்கள் குழுவினால் வழங்கப்படுகின்ற பரிந்துரைக்காகவும் நிறுவனத்தால் முந்தைய ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட அப்பரிந்துரைகளை அங்கீகரிப்பதற்காகவும் வழங்கப்படுகிறது.
- மத்திய தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகமானது விஸ்வகர்மா ராஷ்திரிய புரஷ்கார் (முன்பு ஷ்ரம் வீர் தேசிய விருதுகள் என்றழைக்கப்பட்டது) மற்றும் தேசிய பாதுகாப்பு விருதுகளை 1965ம் ஆண்டு முதல் வழங்கி வருகிறது.
- NSA ஆனது, AERB (அணுசக்தி ஒழுங்குமுறை வாரியம்) என்ற அமைப்பின் கீழ் உள்ள தொழில்துறை நிறுவனங்கள், கட்டுமானத் தளங்கள், துறைமுகங்கள் மற்றும் கட்டிட அமைப்புகள் போன்றவற்றின் தலைசிறந்த பாதுகாப்பு, தொடர்பான செயல்திறனை அங்கீகரிப்பதற்காக வழங்கப்படுகிறது.

## முதல் பழங்குடிகள் சுற்றுப் பாதைத் திட்டம்

- சத்தீஸ்கரில் உள்ள 13 சுற்றுலாத் தளங்களை இணைக்கும் நாட்டின் முதல் பழங்குடிகள் சுற்றுப் பாதைத் திட்டத்தை மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் தொடங்கி வைத்தார்.
- இது, நாடு முழுவதும் சுற்றுப்பாதை சார்ந்த வழித்தடங்களை திட்டமிடுதல் மற்றும் முன்னுரிமை அளித்தல் முறையில் மேம்படுத்துவதற்காக 2014-2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட சுற்றுலாத்துறை அமைச்சகத்தின் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.
- இம்பால் மற்றும் கோன்ஜோமிற்கு பிறகு நாட்டில் ஸ்வதேஷ் தர்ஷன் திட்டத்தின் கீழ் தொடங்கி வைக்கப்பட்டிருக்கும் இரண்டாவது திட்டம் இதுவாகும்.

## திறன் மேம்பாட்டுத் திட்டம்

- பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழுவானது 2017-18ல் இருந்து 2019-20 வரையிலான காலத்திற்கு திறன் மேம்பாட்டுத் திட்டத்தின் தொடர்ச்சியை அங்கீகரித்துள்ளது.
- இது நடைமுறையில் செயலில் உள்ள மத்தியத் துறைத் திட்டமாகும். இது, கொள்கை வகுப்பாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெரிய அளவிலான நம்பகத் தன்மை

மற்றும் அதிகாரப்பூர்வ புள்ளியியல் விவரங்களை சரியான நேரத்தில் வழங்குவதற்காக உட்கட்டமைப்பு, தொழில்நுட்பம் மற்றும் மனித வளங்களை அதிகப்படுத்தும் நோக்கம் கொண்ட திட்டமாகும்.

- பொருளாதாரக் கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் வலிமைக்கான ஆதரவு என்ற இரண்டு சார் திட்டங்களை திறன் மேம்பாட்டுத் திட்டம் கொண்டுள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## உலக உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை - 2018 அறிக்கை

- சமீபத்தில் உலக உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து நிலை 2018ன் அறிக்கை வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கை ஐ.நா. உணவு மற்றும் விவசாய நிறுவனம் (FAO - Food and Agriculture Organisation), விவசாய மேம்பாட்டிற்கான சர்வதேச நிதி (IFAD - International Fund for Agricultural Development), ஐ.நா.வின் குழந்தைகளின் நிதி (UNICEF - UN Children’s Fund), உலக உணவுத் திட்டம் (WFP - World food Programme) மற்றும் உலக சுகாதார நிறுவனம் (WHO - World Health Organization) ஆகியவற்றால் வெளியிடப்பட்டது.
- இந்த அறிக்கையின்படி பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 2017ல் ஊட்டச்சத்து குறைபாடு உள்ள மக்களின் எண்ணிக்கை 821 மில்லியனாக அதிகரித்துள்ளது.

# மாநிலச் செய்திகள்

## பட்டியல் வகுப்பினருக்கான மாநில ஆணைய மசோதா - 2018

- ஹரியானா மாநில சட்டசபையானது பட்டியல் வகுப்பினருக்கான மாநில ஆணைய மசோதா - 2018ஐ நிறைவேற்றியது.
- மாநிலத்தில் உள்ள பட்டியல் வகுப்பினரின் ஒட்டுமொத்த வளர்ச்சி, அவர்களின் நலம் மற்றும் அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்க ஆணையம் அமைப்பதற்காக இம்மசோதா நிறைவேற்றப்பட்டுள்ளது.
- மேலும் இந்த ஆணையமானது பட்டியல் வகுப்பினர் மீது நிகழ்த்தப்படும் வன்முறைகளை கண்காணித்து அவற்றைக் கட்டுப்படுத்தும்.
- இந்த ஆணையமானது அரசால் வெளியிடப்பட்ட ஆணை அல்லது நடைமுறையில் உள்ள சட்டம் அல்லது அரசியலமைப்பு ஆகியவற்றில் உள்ள பாதுகாப்பு அம்சங்களின் பணிகள் குறித்து இக்குழு விசாரிக்கும்.

# முக்கிய தினங்கள்

## தேசிய இந்தி திவாஸ் - செப்டம்பர் 14

- இந்தி தினம் என்று அழைக்கப்படும் தேசிய இந்தி திவாஸ் இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 14 அன்று அனுசரிக்கப்படுகிறது.

- இத்தினமானது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் வாழும் மக்களுக்கு இந்தி மொழி, அதன் கலாச்சார பாரம்பரியம் மற்றும் விழுமியங்களை பரவச் செய்கிறது.
- 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் 14 அன்று இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்தி மொழி அலுவல் மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- - - - - - - - - - - - - - -